ஸ்ரீ

தசரத ராம சதகம்

(இராமாயண சரித்திரத்தை வெளியிடும் நூல்)

இது,
ஸ்ரீ

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால்,

வேலூர்

ரிகார்டு அச்சியந்திர சாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

[All rights Reserved.]

1914

விலை அணா [redacted]

முகவுரை

தசரதராமசதகம் என்னும் இச்சிறுநூல், இராமசரித்திரத்தை வெளியிடும் எளிய நடையில் அமைந்த நூறு விருத்தங்களால் ஆகியது. ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும், "சனகி மனமகிழ் காம ஸுவசன விநய பூம தசரத குமார ராமா" என்பது மகுடமாக வந்துள்ளது. இந்நூலை இயற்றிய ஆசிரியர் இன்னரெனத் தெரியவில்லை. இந்நூலின் காப்புச்செய்யுளால் இதன் ஆசிரியர் வைணவமதத்தவரெனத் தெரிகிறது. இந்நூல் என்னால் ஓலைச்சுவடியினின்று எழுதி அச்சிடப்பட்டதாகும்; அவ்வேட்டுப்பிரதியில், இந்நூல் வியய வருடத்தில் எழுதிமுடிந்ததாகக் காணப்படுகின்றது. எந்த வியயவருடமோ அது தெரியவில்லை. ஓலைச்சுவடியிலுள்ள இந்நூற்செய்யுள்களில் பற்பலவகையான பிழைகள் மிகுந்திருந்தன; அவற்றிற் பெரும்பாலனவற்றைத் திருத்தஞ்செய்துள்ளேன். திருத்தவியலாதவற்றை அவ்வாறே பதிப்பித்துவிட்டேன். இதற்குமுன்பு இந்நூல் அச்சிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சிறுவர்களும் சிறுமியர்களும் இராம சரித்திரத்தை எளிதாகப் படித்தறிதற்கு இந்நூல் உபயோகமாகலாமென்ற கருத்துடன் யான் இந்நூலை வெளியிடலானேன்.

இந்நூலிற் குற்றங்குறைகளைக் காணும் அறிஞர் அவை அகலுமாறு சீர்திருத்தங்களை அறிவிப்பாராயின் வந்தனத்தோடு ஏற்றுக்கொண்டு, அவற்றை அடுத்த பதிப்பிற் காட்டச் சித்தனாக இருக்கிறேன்.

வேலூர்
1914ஸு மேமீ 10உ. } பு. க. ஸ்ரீ.

1-4 PAGES MISSING IN BOOK

பட்டமது கட்டி னீயும் பாதனும் பின்பு
பரதேசிபோ லலையவும்
பாரெலாம் ராமனே யாளவுங் கோசலை
பணித்திட்ட மோசமிதனுக்
கட்டிசொல்லா னரசனுங் கௌசலைக் கென்ன
அனுகூலகால மென்ன
அக்கேகயன்மக ளிதற் கென்னவகை யென்ன
ஆதியருள் வரமிரண்டால்
இட்டமொடு பரத னம்புவியாள வெங்கானில்
இராம னெய்திடுவதாக
இனி வரங்கேளென்ற வகை யவளிரத்தல்கேட்
டேந்தல் தனதாவி தளரச்
சட்டமொடு தாயுரை தடுக்காம லப்பொழுது
சடைமுடி தரித்த வாமா
சனகி .... ராமா. (8)

பருவ மாண்டீரேழு தவமது புரிந்திடப்
பரத னிப்புவி காக்கவே
பண்ணியது புண்யவச மென்றெண்ணி விண்ணவர்கள்
பாக்கியம் பலித்ததெனவே
அரிவை மிதிலாபுரி மடந்தையொ டிலக்குவனும்
அன்பொடு வரக் கொண்டுசென்
றயோத்திவிட்டுக் கான மடைய வத்தயாதற்
கமைச்ச ரச்செய்தி செப்பத்
திருமகன் விலங்கு சோகத்தினாற் றயாதன்
தெய்வீசனை மீண்டுஞ்
சென்றெதிர் பகீரதி கடந்து குகனாச்ரமம்
சென் றவன்றொழ மகிழ்ந்து
தருமேவு சோலைதிகழ் சித்ர கூடந்தனிற்
சார்ந்திடு குணபிராமா
சனகி .... ராமா. (9)

சீலமுள பரதனுந் திறற்சத்துருக்கனொடு
சீர்தவி ரயோத்தி மேவித்
தீர்ந்த மன்னவனுக் கடுத்த முறைமைச் செய்து
செயமுனி வதிட்டனாலே

கோலமுடி தந் திராமன் சுரத்தடைதரக்
குவலயந் தாய் தனக்குங்
குறித்ததை யறிந்து கைகேயியை வெகுண்டனன்
கோசலையை மிக வணங்கி

ஞாலம்வேண்டே னெம்முன் பாதமே கதியென்று
ஞான முனிவா ரமைச்சர்
நற்றாயரொடு சத்துருக்கனுந் துணைவனொடு
நால்விதச் சேனையோடும்

சாலவேவந் துனது பாதமலரிற் பரிவின்
சரணென வடைந்த சோமா
சனகி .... ராமா. (10)

அன்னையர்களுந் துணைவருந் தந்தை யுயிர்விட்ட
தான் மிக வரற்றல்கண் டென்
அண்ணலே யென்னையீன் றன்பொடு வளர்த்திட்ட
ஐயனே யென்ன வேங்கித்

தன்னிகரிலாத் தவவதிட்டனாற் றேறி மேல்
தகுதந்தை கருமமெல்லாம்
தாழ்வற முடித்தபின் வருதம்பிதனை நகர்
தனியரசு புரிதி யென்னச்

சொன்னமொழி பரதனுக் கிசையாது பொற்பதம்
துணையெனக் கென்று பணியத்
துய்ய தாய் தந்தை மொழி தவறாறவகை யெனது
சொற்கொண்டு புவியாள்கெனத்

தன்னடி பரித்த* பாதுகை யீந்து பரதனைத்
தனியரசி லுய்த்த சீமான்
சனகி .... ராமா. (11)

* 'பணித்த' என்பது பிரதிபேதம்.

திருவடித் துணைகொண்டு பரதனுந் தாயரொடு
சீர்முனிவரோடு பலரும்
செழும்புக ழயோத்தி மாநகரத் தடைந்தபின்
தென்றிசைமுகத்தை நோக்கி

மாவுரி யணிந்து தவவேடமோ டெழினந்தி
மாநகரி மேவி நீர்சூழ்
வையகத் தரசாட்சி முறைமை செங்கோனீதி
மார்க்கங்கள் யாவு முன்றன்

அருளடிக் கொப்பித்து மனனுறப் பூசித்தும்
அநுதினமு மிந்த விதமா
அரிய மாதவமிருந் தரசாள வேழிரண்
டாண்டினின் மீண்டணுகி முன்

சரதமொடு வருவதா நவில்சொலிற் பரதனொடு
தாய ரெதிர்பார்க்கும் வாமா
சனகி ... . ராமா. (12)

கார்முக விலாசமுடனே யிளைய தம்பியொடு
கஞ்சநிகர் செஞ்சரண நற்
காரிகையுடன் படர மேருநிக ரவ்வரை
கடந்து நடுவன் றிசையினிற்

சீரோடு நடந்து சுரமோடு வரை யாறு பல
தீர்த்தமுள சோலை வனமும்
சிங்க மதயானை புலியுங் கடமை மானொடு
சிறந்திடு விலங்கு நோக்கிச்

சோருறாய் காய்கனிகிழங்கிலை யருந்தி யனை
சொன்னமொழி யுண்மையாலும்
தொல்லைநா ளிமையவர்க் குரைசெய்தபடி யசுரர்
தொலைய நாளானதாலும்

சாரசுரர் மேவியிடு கான்வழி செலும் பரம
சற்பொரு ளனந்த நாமா
சனகி .... ராமா. (13)

அருஞ்சுரத் தெல்லை யணுகுந் தடமதிற் கொடிய
அந்தகாரச் சாயலோ
டாதித்த கிரணகண மூள்கனல் விழிப்பொறியொ
டாங்கார கர்வமாகி
வருங் கொடுவிராதனெதிர் வந்த வைதேகிதனை
வலிமையாலே கவர்ந்து
வஞ்சகன் ககனமீதோட முறையிடு சீதை
மனமகிழ வனுசனொடு போய்ப்
பெருங்கிரியெனுங் கொடிய னற வாளின் மோதி யவன்
பேசிய துதிக் குகந்தே
பின் மிதிலை வல்லியொடு தன்றுணைவனோடும் ப்ர
சண்ட கோதண்ட சாபம்
சரங்களொடு வாள் கதை முதற்படையொடும் படரும்
சற்பொருட் புருடோத்தமா
சனகி .... ராமா. (14)

செய்ய சரபங்கமுனி வைகிய தவச்சாலை
சென்று திருமாமுனிவனைச்
சேவடி பணிந்து தண்டக வனமதிற் சென்று
செய்தவ ரநேகர் மொழியின்
அய்ய மகலும்படி யிருந் தாண்டு பத்தகன்
றடுத்த கோதாவிரியினை
அடைந்து நீராடி மாதவரடி யிறைஞ்சியே
அன்பொடு சுமித்ரை யீன்ற
துய்ய துணைவன் செய்த பன்னசாலையின் சார்ந்து
சுரர் முனிவர் துன்ப மகலத்
துட்ட ராட்சதகணம் வருந்தடந் தேடி கற்
சொற் கனி கிழங் கருந்தித்
தய்யல் சீதாமணியுடன் பஞ்சவடி தனிற்
சார்ந்திடு மயோத்தி ராமா
சனகி .... ராமா. (15)

புண்டரீகன்றரு புலத்திய னளித்த சுதன்
புகழ் பெருகும் விச்ரவாகு
புதல்வனுப் புட்பக விமானமொடு சிவனன்பன்
புகழ் வடதிசைக் கதிபனுய்
அண்டர் மகிழும்படி யிலங்கையிற் குடியாகி
அரசாண்டிருக்கு மளவில்
அருடந்தையான விச்சிரவாகு வைப்புலன்
அடக்கி நிஷ்டாதிபதியாப்த்
தண்டொடு கமண்டல மெடுத்த முனி யொருசார்பு
தங்கியே சங்கரனெனத்
தவத்தொழில் புரிந்திடு மகத்துவமெலாங் கண்டு
தன்பதி யடைந்ததாமே
சண்ட வுத்தண்ட கோதண்ட ப்ரசண்டனே
தகைகொள் ரகுவம்ச முத்தே
சனகி .... ராமா. (16)

மாமுனி மிகுந்த மாதவமது செயக் கண்டு
மலாருங்கழல் வணங்கி
வந்தனஞ் செய்திட மகிழ்ந் திருடியுந் தனது
மைந்தனெனன வன்பு கூர
ஆமென விலங்கைநகரிற் சென்று சிற்பகல்
அகன்றபின் பளகையானும்
அவுண மங்கையர் மூவரைக் கொண்டு தந்தை வாழ்
அருந் தவச்சாலை மேவிக்
காம வல்லியவை முனி பணிவிடைக் கருளியே
கனகனு மிலங்கை புக்கான்
கன்னியர்கள் வழிபட நடந்து வரசித்திமா
கைவல்ய தவ மிருந்தான்
சாம கானம் பாடி விஞ்சையர்கள் கொண்டாடு
சாமியே சர்வோத்தமா
சனகி .... ராமா. (17)

சிந்தை மகிழத் தவ மிகுந்த விச்சிரவாகு
செய்தவ முடிந்ததற்பின்
தேனின் மொழி மங்கையரை நோக்கி வேண்டுவ தென்ன
செப்புவீ ரீவ னென்னக்
கந்தமலி கொந்தளக சுந்தரிகண் மூவரும்
கவின் புத்ரர் பலர் மல்கிடக்
காதலா லெமை மருவி யருள்புரிக வென்னக்
கணத்திற் கலந்த வதனால்
இந்து நுதற் கைகசி யிராவணன் கும்பகனன்
இனிய மாலினி வீடணன்
எழில் ராகை யென்பவள் கரன் சூர்ப்பணகைதுணையும்
ஈன்றன ரினம் புகழவே
தந்தி முறையென் றலற வந்துதவு சுந்தர
சனந்தனர் துதிக்கு நாமா
சனகி .... ராமா. (18)

அத்தின முதித்த சுதர் சாதகருமங் குறைவில்
அன்புதரு நாமகரணம்
ஆதியாம் வேத முறை நீதிக டெரிந்தவர்க்
கணியு முந்நூல் தரித்துப்
புத்திரரை மிகவும் வாழ்ந்திட வாசி மாமுனி
புகன்றபின் புண்டரீகன்
பொன் னடித்துணை கொண்டு சொன்ன ராவண னாதி
புத்ரர் மாதவ மியற்றச்
சித்தி மாதவ மிருந் தயுத காலஞ் செலிற்
சிர மொன்று கொய்தவோமத்
தீயிலிட் டொன்பது சிரம் போக்கியுந் தவம்
செய்தனன் றசக்கிரீவன்
தத்தி யடிவைத் தகலிகைக்கு முன் புற்ற முனி
சாபந் தவிர்த்தருளு மா
சனகி .... ராமா. (19)

சென்னி யொன்றுங் கொய்து தீப்பெயக் கருதுறத்
திசைமுகன் மகிழ்ந்து பத்துச்
சிரங்க டொலைவிலவாக வெத்தேவராலும்
செயிக்கப்படாத வலியும்

தன்னிகரிலாத வரசாட்சியொடு புத்ராதி
சம்பத்து மிகவு நல்கித்
தம்பி கும்பகனுக்கு மாறுத நித்திரை
தரும நல்வினை சார்ந்திடச்

சொன்ன வீடணனுக் களித்து நன்னீதியொடு
துய்ய மொழி யோதி மிக்க
துட்டனுங் கானுக் கிசைந்த வரமுந் தந்து
சொர்க்கத்தி ல்ய னடைந்தான்

தன்னிகரிலாத மிதிலாபுரியின் மேவு மொரு
சனக னகமகிழ வந்த
சனகி .... ராமா. (20)

அம்புயன் றந்த வரமது பெற்ற விட நீங்கி
அனிகங்கள் புடை சூழவே
அட லிராவண னிலங்காபுரியின் மேவுமுன்
அங்குறைதருங் குபேரன்

சம்பிரம மேவு மிவ னுரென்னு மதுசெய்தி
சாரணர்களா லறிந்து
தானை வெள்ளங்களொடு தானிலங்கையை யொரீஇச்
சார வளகா நகரியிற்

கும்பகன் முதற் கொடியரோடு சிவனுருண்ட
கொடுவிடமதற்கு நிகராங்
கோர தைத்தியாதி யநிகங்களொ டிராவணன்
கூறிலங்கையினை யாண்டான்

சம்பராசுர னுயிர் கொண் டமரரைக் காத்த
தாணிப னளித்த சோமா
சனகி .... ராமா. (21)

வேலைநிகர் விழி மாது வண்டோதரிக் கனியை
வேட்டபின் றுணைவர்கட்கும்
விழை மண மியற்றி யிந்திரசித்தொ டட்சனே
மிக்க வதிகாயன் முதலாம்
ஆலநிகர் மைந்தரவர் மைந்த ரனுசர்கண் மைந்தர்
அருண் மித்ர புத்ராதியோ
டாங்கரித் தமரர்களை மதியாது கொடுமைசெய்
தந்தகனு மஞ்சி யேங்கக்
காலபலமுந் தன தனீகபலமுந் தரு
களத்ரபலமுங் குறைவிலாக்
கஞ்ச னருள்தரு பலமு மிஞ்சு புசபலமுடன்
கடவுளர்க் கிடர் செய்தனன்
சால மறை தேட வறியாத மூலாதார
சர்வாந்தர்யாமீ மாயா
சனகி .... ராமா. (22)

வடதிசைத் தலைவனொடு வானவர்கண் முறையிடவின்
வரு மொற்றர்தமை யிலங்கை
மன்னிடத் துய்த்து விண்ணவர்தமக் கிடர் செய்தல்
வளமல வெனத் தெரிக்கத்
தடவரை நிகர்த்த புய ராவணன் சீறி மேல்
சதுரங்க சேனையோடும்
தனத னகரிற் சென்று சமரி லவனை வென்று
தழை புட்பகத்து வரவோர்
இடாறு பரம்பொரு ளிருக்கும் வரை கண்டஞ்சி
எழில் விமானந் தடையுற
என்னென் றிராவணன் மயங்கவிற் கண்டு வந்
திவை யுரைத்தன னந்தியும்
சடைமுடி தரித் தடவியிற் செல வியைதலின்
தாய்மொழி மறுத ராமா
சனகி ... . ராமா. (23)

மூப்புர மெரித்த பொருண் மூவர் முதலானவர்கள்
மூன்றுடைய கர்த்தன் வரைமேல்
மூந்தி நடவா துனது புட்பக மெனச் சில
மொழிந்து நின்னூர்ப்பு கென்னச்
செப்பிய சிலாதனின் மகனை யவிராவணன்
சீறி வாநர ரூபமாய்ச்
சென்றநீ யாரடா வென்றுரேத நந்தியும்
சீறி நின் செல்வமெல்லாம்
ஒப்பிடு குரங்கி னழியக்கடவதா மென்ன
உதவு சூளுரை பிணிக்க
ஓதரிய சங்கா னிருந்த சயிலத்தை வே
ரொடு பறித்தனன் ராவணன்
தப்பில் குணமார் முனிவன் வேள்வி நிறைவேறும் வகை
தம்பியொடு சென்ற வாமா
சனகி .... ராமா. (24)

நக்க னிதறிந்து தாள்விர லூன்ற வெள்ளிமா
நாக மிவன்மீது கவிய
நசியுண்டு புயவலிகளற் றசைவிலாம னெடு
நா ளகன்றிட்டகாலே
மிக்க வோர் கந்தருவன் மேவி யாளைக் கான
வீணையாற் றுதி யென்னலும்
மிகு மொரு சிரங் கர மறுத்து வீணையதாக
வீறு கானம் பாடலும்
அக்கணமதிற் பரம னந்திமிசை வந்து கேட்
டருள் வர மளிக்க வாங்கி
அநுச ரனிகங்களை யிலங்கையி லுறத் தண்
டகமதிற் காளை யுய்த்தான்
சக்கரமொ டொக்க வளை நற்கரமதிற் றுங்கு
தக்க புகழ் மிக்க தாமா
சனகி .... ராமா. (25)

செய்ய புட்பகமீது சென்று திக்கெட்டையும்
செயித் திலங்கையில் ராவணன்
செல்ல விளையோ னமரர் செய்த வஞ்சஞ் சொலச்
சீறி வடவைக் கனலதாய்
மெய்யது புழுங் கிராவண கும்பகர்ணன் முதல்
மிக்க தன் சேனையோடு
மேவி யமராவதி வளைந் தமரில் வாசவனை
வென்று சிறைகொண்டு வரலால்
ஐய்யமறை யருளிய விரிஞ்ச னெதிர் வந்தோத
வாசவன் சிறைதவிர்த்து
வந்தமரர் தங்கண் மடவார் வழிபடச் சிறையில்
வைத்தரசளித் திருந்தான்
சய்வல நிகர்த்த குழலும் பவழ வதரமும்
சந்த்ர வதனமு மொளிவிடும்
சனகி .... ராமா. (26)

விண்ணவர்கண் மாமுனிவர் வந்து தினமும் பணிய
மிகு வெற்றிபெற் றாண்மையும்
வீடா திலக்கவைம்பது வற்சரங்களும்
வினை விளைத் தரசு செய்போ
தெண்ணரு தபோதனர்களோ டிமையவரு மெய்தி
இனிய பிரமன் றிருமுனே
இரங்கிராவண கும்பகன் கொடுமை கூற விதி
இனி யஞ்ச லொழிக வென்று
பண்ணவர்க ணந்திசொற்படி கவிகளாக நீள்
பாரளந்தோன் றயரதன்
பாக்கியத்தால் ராமனென வந்திராவணப்
பகையினை முடிப்ப னென்றான்
தண்ணழகு வாய்ந்த வயல் சூழ்ந்த மிதிலாபுரி
தனக்கிறை தவப்பய னெனும்
சனகி .... ராமா. (27)

ஆதி முதல்வானவ ருரைத்திடு விதப்படி யோர்
அணுவளவு தவறுமலே
அம்புவியிடத்தி லவதாரமது கொண்டனர்கள்
அஞ்சற்க பத்து முடி சேர்

காதக னழிந்துவிடு காலமது கிட்டியது
காரியமி தென்ற பிரமன்
கட்டுரை யறிந்து தவ மாமுனிவர் ஞான நெறி
கடவாத தவ மாற்றினர்

போத முனுரைத்தவர்களிற் கொடிய சூர்ப்பணகை
பூமி விண் டுக்கமுறவே
பொங்கமொ டிலங்கைநகர் தங்கி மகிழ்வாகி யுறை
போதி லொருநாளதனிலே

தாதவிழ் மலர்த்தட மிகுந் தண்டகந்தனிற்
சார்ந்தன னனந்த நாமா
சனகி .... ராமா. (28)

நீடு முன தந்தமுந் தம்பி யெழிலுஞ் சனகி
நிகரற்ற வடிவு நோக்கி
நிறை மையலான சூர்ப்பணகை யரமக ளுருவம்
நேர்ந் துனை யடைந்து சிலவா

றாடுமவள் கொங்கை செவி நாசியது கூறுற
அரிந்தனன் றம்பி யவள் சென்
றழுது கரனுக் கறிய வோத மிகுவெகுளாகி
அளவற்ற சேனையோடும்

தூடணனுடன் றிரிசிரத் துணைவ னுடன் வரத்
துங்க விர தங்க டொகுதி
சொல்லு மிரேழாயிரங்களொடு கரன் சென்று
சூழ்ந்துனை வளைந்த பொழுதில்

சாடு முனதம்பு சில தாக்கும்வகையா லவர்கள்
தம்முயி ரகற்று வீரா
சனகி .... ராமா. (29)

கோடுங் கர னெடுங்கியது கண்டு மனதேங்கியே
சூல நாசகாரி சென்று
குழுகிருத ரடிபணிபு மடவிராவண னுடன்
கூற வவனுஞ் சீறியே
மடங்கலைத் தொடர்கின்ற மானெனச் சனகிமேல்
மையலாய் மாரீசன் வாழ்
மனை யடைந்திட வவனு மற்றடித் துணை போற்றி
வருவகை தெரித்தி யென்ன
நெடுங்கயல் விழிச் சனகியைக் கவர யானடைவன்
நின் மாயமதி லிராமன்
நேய விளையோன் பிரிந்திடு முபாயஞ் செய்ய
நீ செல்க வென்றோதினன்
தடந்தனி னெடுங்கரி தளர்ந் தபயமிட வந்து
சக்கர மெறிந்த வள்ளால்
சனகி .... ராமா. (30)

அங்கவர்கண் மானிடர்க ளலரென்று மிக்க திறல்
ஆண்மை யுடையவர்க ளென்றும்
அரும்பகை முடிக்கவென் றவனிமிசை தோன்றுமவர்
அவதார சீல ரென்றும்
மங்கைதனை நீகருதல் விபரீதம் வருமென்றும்
மாரீசன் மொழி யுணர்ந்து
மத மூண்டவன் சீறி வாளி லங்கவ னுடலை
மாள வெட்டுவ னென்னவே
பொங்கிராவணன்மீது முனிவாகி மாரீசன்
பொன்னுழையதா யணுகியே
புகழ் பஞ்சவடி தீரமதி னடமிடக் கண்டு
போந்து மிக வக மகிழ்ந்து
தங்க நிறமாய் வந்த சிங்கார மானென்
தனக்குப் பிடித்தளி யெனும்
சனகி .... ராமா. (31)

மாபமென வுரைசெய்த தம்பிமொழி கேளாது
மான்பொருட்டாக வெய்தி
மதிமயக்கஞ் சேர யோசனை யகன்றபின்
மானை யெய்திட வதன்சொல்

சேயிழை யறிந்துசென் றறிதியென வனுசனொடு
செப்ப வது மாய மென்னச்
சிந்தைதனி னைந்தம்மை சொல்லாத மொழி சொலச்
சென்றனைத் தம்பி மேவும்

ஆயிடையின் மாயமுனி யாக வீரைந்தலைய
னணுக வறியா வைதேகி
ஆசன மளித்தளவினிற் கொடியனுந் தன்ன
தச்சமுறு வடிவ னாகித்

தாயை வசை சொல்லுகையிலே நடுநடுங்கி யெதிர்
தன்னுரை வழங்கி முனியும்
சனகி .... ராமா. (32)

சீரின் மொழி வாளியி லிராவணன்றனை யெய்து
செய்தவக் கோயில் புகவும்
தீய னங்குச் சீறி யட்டையுட னம்புவி
திடுக்கிட வெடுத் திரதமேல்

காரண விதிச் செய்தி தெரியாமல் வைத்து மிகு
ககனத் தடத்தி லணுகும்
காலை யதறிந்து காகுத்தன் வருமளவு மிக்
கள்ளனை மறிப்ப னென நேர்

போரினின் மறித்திடு சடாயு சிறை வெட்டியே
பூவை பூண் டிர ளெறிந்து
புலம்ப வம்புதி கடந் திலங்கையை யடைந்து நற்
பூமலர்க் காவணங்கள்

சாரெழி லசோக நிழலிற் சிறையிடப் பண்ணு
தவ மிக வருந்தி யாற்றும்
சனகி ... . ராமா. (33)

இங்கிளையவன் செல்ல வெம்மா னுயிர் போக்கி
எதிர்வரு ப்ரசண்ட சாபத்
திறையுட னிதைப் பகர வுறுகவலையின் மூழ்கி
ஏகி யாச்சிரமமதனில்

பங்கயமலர்ப் பதுமையைக் காணிலாததாற்
பரிதாப மதிகமாகிப்
பார்மகளின்மேற் சாய்ந்து நீ மறுகு மக்கால்
பணிந் திளையவன் பகரவே

நங்கையவளைக் கவர்ந்தா னுட னவன்குலமும்
நாசமாக்கிடுவெ னென்று
நயனஞ் சிவக்க வியர்வது காண முனிவாய்
நடந் திளைய தம்பியுடனே

சங்கையற வுருளையின் சாடைகண் டெய்திச்
சடாயு வன முற்ற வாமா
சனகி .... ராமா. (34)

செய்யவ ணிமித்த மடர் சிறை யுறுகளத்தில் வீழ்
செடாயு புள்ளர செதிர்ந்த
செய்திக ளறிந் தவன் மால்பதத்திற் செலத்
தீர் விதிகண் முறைமை செய்து

தய்யல் சிந்தாமணிதனைத் தேடி யந்தகன்
தன் றிசை நடக்கு மக்கால்
தகு மொரோசனை நீள மிகு கரமதிற் சிக்கு
சர்வ சீவனையும் வாரிப்

பய்யவே தின்றிடு கபந்த னுறுகையினிற்
பட்டு நீ தம்பியுடனே
பற்றுமவ னிருகரமு மற்று விழ வெட்டவும்
பட்டவன் பண்ணவனுமாய்ச்

சய்யென விமானமிசை கொண்டமரர் பூத்தூவத்
தனி நின்று புகழும் வாமா
சனகி .... ராமா. (35)

புண்டரிக னிட்ட சாபத்தி னிவ்வுருவுடன்
புன்றொழில் விளைத்த முறையும்
போத நின்னு லவன் றீதகன்றது மெழில்
பூவையை யிலங்கை யசுரன்
கொண்டு போனதுவு மக்கொடியோன்றனை வெற்றி
கொள்ள வகை யுள்ளது மெலாம்
கூறி வரு புட்பக விமானமிசை யம்பரம்
குறுகி விஞ்சய்ய னுக
மண்டலம் புகழ் பம்பை யங்கரைதனிற் சென்று
மலர் வண்டு தளிர் குரும்பை
வகை கண்டு சனகிக்கு நேர்ந்ததை மனங்கொண்டு
வரு கவலையான் மெலிந்த
சண்ட வுத்தண்ட கோதண்ட ப்ரசண்டனே
சர்வாந்தர்யாமியான
சனகி .... ராமா. (36)

அங்கிருந்திட்டவகை யனுமனொடு வாநரர்கள்
அறிவிக்க வப்போதுவந்
தடியின் முடியுற வீழ்ந்து னடிமையாற் சுக்கிரிவன்
அல்லலது சொல்ல மகிழ்வாய்ப்
பொங்கிருச்சியமூக மனுமன் சென்றுரைசெயப்
பொன்னடிகடன்னில் வீழ்ந்த
போது சுக்ரீவனைக் கையடைய தாக்கியே
புந்தியின் மகிழ்ந்து நண்பாய்ச்
சங்கையற நின்மனச் சஞ்சலமதைச் சொலும்
தருணத்தி லிரவிமகனும்
சனகி பணி யீந்திட மனந்தளரவும் பரிதி
தனய னென்பகை தவிர்ப்பாய்
தங்கும் வாநர வெள்ள மெழுபதி லிராவணன்
தனை வெல்வ னென்றனன் மேல்
சனகி .... ராமா. (37)

சீதை சிறைமீட்டு வருவேனென வுரைத்த ரவி
சிறுவனை யுனக் குறுகுறை
செப்பென வுரைக்க விபுதர்க்கிறை சுதன் கொடுமை
தேர்ந்திட வறைந்தவளவில்
பாதகனை வென் றினியபாருனக்குத் தந்து
பட்டமது கட்ட லறனும்
படர்ந் தவனுடன் சமர் புரிந்திடுதி யென்னவும்
பரிதிமக னுள்ளையமாய்க்
கோதறு மராமரமொ ரேழினையு மோர்பகழி
கொண் டுருவ வெய்தி யென முன்
கூற வொரு வாளிதனி லேழ்தருவொ டேழ்வரைகள்
குலையவே யெய்து மற்றும்
சாதலுறு துந்துபியி னென்புமலை கால்விரற்
சற்றெடுத் தெற்று வீரா
சனகி .... ராமா. (38)

கண்டிரவி மைந்த னடல் வாலியெதிர் சென்று சமர்
காணுவம் வருக வென்று
கடுங்கன லெனும்படி முனிந்தவ னெழுந்திடக்
கன்னன் மொழி தாரை மேவி
மண்டலத் தயரத குமாரர் பம்பாதீரம்
வந்தனர்க ளென்று கேட்டேன்
மர்ம மறியா தமரி லேகுதல் தகாதென
மறித்திட விராம லனுக
மண்டுபோர் வாலிசுக் ரீவருஞ் செய்பவே
மறைவி லச்சூழ லுற்று
மன்னிலக்குவனோடு மெவனிரவி சுத னெவன்
வாலியென மாழ்கி யுடனே
சண்டையி லிளைத்த சுக்ரீவனைக் கந்தரத்
தாரினாற் கண்ட பூமா
சனகி .... ராமா. (39)

மேனு மஞ்சாதபடி வாலியொடு சுக்ரீவன்
மிகு சமர் விளைக்குமளவில்
மிக்க திண் சிலை கோலி வெய்ய வம்பினை யேவ
மேவுமவ் வாலி மார்பில்
ஆலமதுபோற் றைக்க வவனிமீ தவசமாய்
அடல் வாலி வீழ்ந்து பேச
அங்கதன் றாரை யாதித்தன்மகன் முதலாக
அனைவரு மிரங்கி யேங்கச்
சீலம்வந் தன்பெருமை வாலி பின் றுதிசெயத்
திருவுள மகிழ்ந் தவனையும்
செய்ய கதி சேர்த் தவன்சிறுவ னிளவரசென்று
செப்பு கிட்கிந்தைமுற்றும்
சாலுமச்சுக்ரீவ னுள முடி சூட்டியே
தனியரசி லுய்த்த வாமா
சனகி .... ராமா. (40)

பட்டாபிஷேக முறு மிரவிமகனுஞ் செய்ய
பதகமலமலரில் வீழ்ந்து
பார்மீது திரிதரும் வானரப்படை வரும்
படி சொலி விடுப்பதற்குக்
கிட்டியது மாரிநாள் கூடாதெனச் சொலக்
கேட் டதைக் கொண்ட நீயும்
கிட்கிந்தை யரசவனை மிக்க தன்சேனையொடு
கிட்டிவரு மாரிகாலம்
விட்டவப்போ தணைக வென்றுரை வழங்கியே
மீண் டுனது தம்பியோடும்
மிகுமால்யவான்மலையில் வந்து சனகியை யெண்ணி
மிகநொந் திரங்கி மெலிவாய்த்
தட்டாத மாரிநா ளொருநாளுமாதமும்
சகித்தருள் குணாபிராமா
சனகி .... ராமா. (41)

தீவலைநா ளகல வரிசேனையோடு மேவும்வகை
செப்பியும் வராத கதிரின்
சேய் நகரி தம்பிதனை யேவ வவனேகி நின்
சித்தானுசார மறையப்

பவன னந்தன் முதற் படைமுக்யரொடு வந்து
பரிதிமக னங்கதனுடன்
பாதவிணையைக் கூடிநின் றரிகள் கிட்டாத
பகுதிக ளுரைத்த பொழுதில்

கவிகள் வருமளவும் வைதேகி நிலை தேடவே
கட்டளை பணிக்க வென்று
காரியவிதத்தை யனுமா னறைய மெய்யென்று
கடல் சூழ்ந்த புவனமுழுதும்

தவிராம லோடி யறியும்படி கவித்தலைவர்
தமை விட்ட சார்வபௌமா
சனகி .... ராமா. (42)

வருணன் முதலான திசை மூன்றினுக் கவரவரை
வகையுடன் விடுக்க வவர் போய்
வையமுழு தாராய்ந்து செய்யவ ளிலாததை
வந்து சொல வாயுதேவன்

திருமைந்தனுட னங்கதனை யமன்றிசை செலச்
செய்ய வவர் தேடி முற்றும்
சீதைநிலையது காண வோதரிய பிலமொன்று
தேர்ந்திட வதிற் புகுந்து

கருணையுன தடியிணையை யுட்கொண் டதன்னிருள்
கடந்து கதிரின் சாயனோர்
கருதரிய நகர்கண் டதின் மாதவஞ்செ யொரு
கன்னிகை யிருத்தல் கண்டு

சாதமொழி நின்னும முறைசெய்ய வவளுற்ற
சாபமு மொழிந்த தம்மா
சனகி .... ராமா. (43)

நல்லறிவுளோர்க ளவணீங்கி நடுவன்றிசை
நடந்து நகரங்கள் பொழில்கள்
நணி வரைகள் பலபல விடங்கண் முற்றுந் தேடி
நாடி விண் மேவு கிரி சேர்

சொல்லரிய தென்கடன் மருங்கினி லடைந்தேனு
சொல்வ ரிவ்வளவு தேடிச்
சுந்தரிதனைக் கண்ட தில்லை மற்றெய்தி நாம்
சுவாமியெதிர் நிற்குமதினும்

புல்லனை மரித்துடன் மரித்திடு சடாயுவைப்
போற் புகழுறக் கதியினில்
போவதே நலமென வுரைத்திடச் சம்பாதி
புள்ளரசு தான் செவியுறீஇச்

சொல்லிய சடாயுவவ னெங்கென்று நீவிரெவர்
சொல்லு மென்றும் பகர்ந்தான்
சனகி ... . ராமா. (44)

அந்த மொழி கேட்டவர்கள் வாயுசேய் வாலிசேய்
அநும னங்கதனு நாமம்
அயோத்திமன் றசரத குமார ராமன் றேவி
ஆகுமச் சீதை நாடி

வந்தனமெனப் புகல வெவ்விய விராவணன்
வைதேகியைக் கவர்ந்தான்
வல்லவர்க ளம்புதிகடந் திலங்கையை மேவில்
வனிதையைக் காணலா மென்

றிந்த வகை சொல்லி யிளையோன்செய லறிந்தயா
இனிய கவிமன்ன ரெல்லாம்
இக்கடல் கடந்துவர மிக்கவர்க ளெவரென்று
யாவரு மிருந் துசாவிச்

சந்தமுள சாம்பவ னுரைக்க வஞ்சனை மதலை
தன்னுடல் வளர்ந்தன ன்றோ
சனகி .... ராமா. (45)

தென்கடல் கடந்தேகி லங்கைநகர் மேவியே
சீதையை யறிந்து வருவான்
திடவுளங்கொண் டுனது திருவடித்துணையிணைச்
சிந்தைமலரிற் கிடத்தி
உன்னுடைய திருவாழி முத்திரைதனைத் தாங்கி
உயர்கிரி மகேந்த்ரமிசை நின்
றோங்கியே விரைவொடு மெழுந் தகல் விசும் புதனில்
ஓடு தன்றந்தை நிகராய்
என்படு மிலங்கைநக ரென்படுந் தல மென்று
யாவரும் வெருக்கொள விரைந்
தெண்டிசை குலுங்க வுறு மண்டமும் விண்ணவரும்
ஏக்க மேலாகி வாடத்
தன்விச்வரூபமொடு தென்கடலை யனுமனும்
தாண்டத் தொடங்கினனரோ
சனகி .... ராமா. (46)

பாய்ந் தகல்விசும்புற்ற காலின் மகனும் பின்பு
பரிய வங்கார தாரை
பாழுடற்குடரினைத் தாரெனச் சூடியே
பாவை யக்கரை யடைந்து
காய்ந்து முற்கா ணிலங்காநகரி யுட்செலக்
காவலா நீள்வாயிலைக்
காத்திடு மிலங்கணி யெனுங் கொடு நிசாசரி
கதித்ததிர்ந் தணுகி வந்தே
ஆய்ந்து பாராத நீ யாரடா வென்றளவில்
அஞ்சனை குமார னேங்கி
அறைய முறையிட் டலறி யனுமனைத் துதிபுரிந்
தந்தகன்பதி யடைந்தாள்
சாய்ந்த மந்தரகிரி விழா தவகை கூர்மமாய்த்
தாங்கிய வருட் பரமனே
சனகி .... ராமா. (47)

பாதக விலங்கிணி யாக்கிதன தாவியைப்
பறித்திட் டிலங்கை மேவிப்
பையரவி னுச்சிமணி போன்ற மாணிக்கம்
பதித்திடு சபாமண்டபம்
தீதறுங் கோபுரஞ் சேர்ந்தொளிர் கூடங்கள்
செவ்வி யமர் மாடஞ் செழுந்
தேசுற்ற பொற்றகட் டெழுது சித்திர மேடை
செல்வங் கொழுத்த வறைகள்
ஆதபனு மஞ்சு மொளி யாஸ்தான மண்டபம்
அந்தத் தரண்மனை துயில்
அறைகள் வண்டோதரியுட னிராவண னுறையும்
அந்தப்புரத்தல மிவை
சாதலற வருள்பெறுங் காலின் புதல்வனும்
தேடியுங் காண்கிலா னால்
சனகி .... ராமா. (48)

நாடி மாருத மனுக வரிதான விடமுழுதும்
நள்ளிருள் படர்ந்த விடமும்
நால்வகுப்பான படை தங்கிய விடங்களும்
நகரி மற்றுற்ற விடமும்
தேடியுங் காணாது சிந்தை மிகவே நொந்து
செப்பு நின்னடியை யெண்ணித்
தெளிந் தருகிலே யொரு குளிர்ந்திடு மலர்ச்சோலை
தெரியவே யங்கு மேவி
நீடிய வசோக நிழலிற் சனகியைச் சிறையில்
நிறுவி யீராயிரவராம்
நீதியி லரக்கியரொடுந் திரிசடை காப்ப
நியமித்தனன் ராவணன்
சாடிவரு மாருத குமார னவ்வனமதைச்
சார்ந்தனன் றிருவினாலல்
சனகி .... ராமா. (49)

வல்லரக்கிய ருரை யெனுங் கொடிய வாளினல்
வாடி வெட்டுண்ட மாளுய்
வதியு மத்திரிசடை வசன சஞ்சீவிபால்
வடு மாறி யுயிர் பெறுவதாய்ச்
சொல்லரிய நின்னும மந்த்ராம்ருதங்களே
துய்க்கு மாகாரமதுவாய்த்
துய்ப துயிலுணவுக ளகன்று வடதிசை கண்டு
சோர்ந்திட்ட கொடிபோன்று மற்
றல்லுடன் பகலு மொன்ருய்க் கோடை மாரியுடன்
அரிய பனிநாளு மொன்ருய்
ஐய நின் றீரகுண மெங்கும் வெளிப்பட
அருஞ்சிறையி லுடல் வருந்திச்
சல்லிய மெனத் துயர் மூட்டுபிரி வாற்ருது
தருநிழற் றவமது செயும்
சனகி .... ராமா. (50)

துட்ட ராட்சசிகள் பலர் சூழ்ந்திட விருப்பதும்
துய்ய வுருவழகு நிலையும்
சொல்லு நின்றிருவடித் துணை துணையெனுஞ் சொலும்
துயரறத் தெரிவிக்கவே
விட்ட தூதுவனை மாருதியு மிவளலால்
வேறல்லள் சீதை யென்று
மிக மனங்கொண் டுவகை மற்று மறியத் தருவில்
வீறுட னிருந்த விரவில்
மட்டிலா விபவங்க ளாடம்பரங்களொடு
மாதர்க ளநேகர் சூழ
வந்தனன் றசமுகன் வைதேகி யெதிர் சென்று
மாற்றங்கள் சில பகர்ந்தான்
தட்டவில்லாது பாதுகை யாணை பெற்றரசு
தாங்கு பரதன் துணைவனே
சனகி .... ராமா. (51)

மாதரரசே யென்னை யாற்றுதல் வழக்கெனவும்
மாற்றங் கொடுத்தி டெனவும்
மலரயன் மகன்மகன் குலமுக்ய னென்னவும்
மறையின் மிக வல்ல னெனவும்

தீதருங் கயிலாய மேந்தினே னென்னவும்
தீர்க்காயு ளுடைய னெனவும்
தேவர்க டினம் பணிய மூவுலகு செங்கோல்
செலுத்து மதிகார னெனவும்

கோதிலா மங்கையர்கள் கோடியுண் டென்னவும்
கோதையே யவர்களுபு மேல்
கூடி வழிபட விந்திராணி முதலோரையும்
கூட்டுவன் றனயசெ யெனவும்

தாதவிழ் மலர்த்தொடையல் சூடு தசகண்டனும்
சாட்டாங்கம் வீழ்ந் துரைத்தான்
சனகி .... ராமா. (52)

இன்னவை மொழிந்தளவி லன்னையும் வெகுளி யுற்
றேழையவனைத் துரும்பா
எண்ணி யாருயிர்மீதி லிச்சை புரியாமலே
எதிர் நின்ற மூர்க்கனுடனே

நின்னுடைய தீதுற்ற கர்வத்தின் யாருமே
நிகரில்லையென் றெண்ணினுய்
நீதி தவருய்க் கற்பு மாதரைச் சிறை வைத்து
நின்னுயிர்க்கேடு சூழ்ந்தாய்

பின்னு மறை வல்லனு னென்கிருய் முறையிலாப்
பிழை சொல்ல மறை பேசுமோ
பெருமகத் தவியினைப் பீடிலா நீசனாய்
பெற்றுணக் கருதலாமோ

தன்னிகரிலாதவென்கணவ னுன்னீரைந்து
தலை கொய்வ னென்றேதினுள்
சனகி .... ராமா. (53)

ஆதலா னின்மாபுளோ ருட னிலங்கைநக
ராரிய சுதர் நண்ப ரெல்லாம்
ஐயன் விடு வாளிகளி னற்று நின் புன்றலைகள்
அம்புவியினிற் புரளவும்
தீதுபெறு கண்பல கழுக்களுணவும் பெறுவை
சில நாளினிற் பாதகா
திருடனுப்ச் சூதினிற் சிறை யென்னை வைத்தனை
தேடிவரு நாத னேக்கின்
மோது கணையா லுனது சென்னி கழலாடு முழு
மூட வென்றே வெகுண்டாள்
மொய்குழ லிணங்கும்வகை செய்கென வரக்கியரை
மொழிதந்து மற்றேவினன்
சாதியினத்தவ னுரைத்ததைக் கொண்டவர்கள்
தாங்கரிய விடர் செய்தனர்
சனகி .... ராமா. (54)

சிங்கமதை நாய்கள் வளை செய்தியென வங்கவர்கள்
சீதையை வளைந்த பொழுதில்
திரிசடை மறுத் தம்மையைக் கடிதணைந் தஞ்சல்
சேயிழாய் வாழி யெனவும்
மங்கை நீ பிரிவான வன்றுமுத லின்றளவும்
மன்னவர்கள் செய்கையெல்லாம்
மந்தரபுயத்த னென்றந்தை கூறின னென்று
மற்று மொரு விந்தையிது கேள்
இங்கொருவ ரெய்தி யுன்னுதர் தஞ் செயலினை
யியம்ப நான் கனவு கண்டேன்
என்று மிக வாற்றவே யிந்துநுத லம்மை மகிழ்
வெய்தின ளுடற் புளகெழச்
சங்கர னெடுஞ்சிலை யொடித்து மழுவாளியின்
தனுவைப் பறித்த ராமா
சனகி .... ராமா. (55)

அவ்வகை யறிந்து மாருதி சீதை தவிர மற்
றங்குள வரக்கிய ரெலாம்
அருஞ்சவமதாக வொரு விஞ்சை புகலும் பொழுதில்
அன்னவ ருறங்கல் கண்டே
திவ்விய சொரூப முறு மம்மை யெதிர்சென் றனுமன்
சீரியோ னுமை யோதல்
செய் தடிதொழச் சனகி யையமற வார்கொல் நீ
செப்புவா யென்ற பொழுதில்
எவ்வரசரும் பணி யிராகவன் றூதனு
னென்னுமை மனுமை னென்றே
இனியவர்களைப் பிரிந்திட்டது தொடங்கியவ்
விருவர்தஞ் செயலை யோதிச்
சய்வலக் குழலி யுனை யறிய வவர் விட வந்த
தாசனென வோதினனால்
சனகி .... ராமா. (56)

முந்தி யத்திரிசடை மொழிந்த வகையே யனுமன்
முற்றுற வுரைத்தவளவில்
முத்தநகை சித்த மொருமித்து நிட்டூரவகை
மொழிசில வழங்க வவனும்
இந்தமதியே னம்ம வெட்டே தினந்தனில்
இலங்கை படு பாடு காண்பாய்
என்று திடமொழி யோதி யினிய திருவாழி தனை
ஈந்திடச் சீதை போற்றி
வந்த சூடாமணி வழங்கி யப்புதி தாவு
வகை யுன்னி வாயு வின்ற
வண்ண மதுசேட் டவனை வாழ்த்தி யக்கவிகள் சூழ்
மன்னிராகவர்களோடும்
சந்தமுட னோர்திங்கடன்னி லணுகா யெனில்
சாத முயிர்விடுவ னென்றாள்
சனகி ... . ராமா. (57)

பாசறி யிராகவ னெடும்பகழி வேகமாய்ப்
பாவையைத் தொழுது சென்று
பண்புடை யசோகவன மெங்கணு மழிக்க வெதிர்
பாய்ந்த கிங்கரர்களோடும்

போரினின் மிகுஞ் சம்புமாலி சேனதிபர்
பொருந் தசஷீனை வதைத்துப்
புலை யிராவணி யேவு மலரயன் வாளியது
போர்த்திடக் கட்டுண்டு தான்

வீர ராவணனெதி ரிருந்து சிலமொழி பேசி
விளைவ தறியாத வசுரன்
மிக்க வாலினி லிட்ட வக்கினி யிலங்கையெனும்
விரிநகர மெங்கெங்கணும்

சாருறத் துரிதமா வாலினை வளர்த்தவே
தப்பற வெரிந்திட்டதால்
சனகி .... ராமா. (58)

மாடகூட மநேக கோடிக ளெரிந்திடவும்
அவைபல சரிந்து விழவும்
அலர்வனங் கருகவுஞ் சலமெலாஞ் சுவறிடவும்
அணி மண்டபங்கள் விழவும்

ஆடரங் கழியவு மகழி புகை காணவும்
அரக்க ருடன் மிக நாறவும்
அவனி குலைகுலையவுறு மண்டமுக டதிரவும்
அம்மை வாழ் தரு தவிர்த்தே

ஓடியோடித் தனது வால்வீசியே லங்கை
ஊரினைச் சுட்ட பின்னை
உற்ற வாலெரிதன்னை யக்கடலி லாற்றியே
ஓங்கு மம்புதி கடந்து

சாடிவரு மாருத மகன் கந்தமா தனம்
சார்ந்தன னனந்த நாமா
சனகி .... ராமா. (59)

அவ்வரையின்மீதி லுறை யங்கதன் முதலர் பலர்
ஆன கவிசட் கோதி மேல்
அங்கவ ருடன் வர நடந்து மாலியவானை
அணுகி யஞ்சனைகுமரனும்
திவ்விய விராமனடியிணை தொழுது கண்டனன்
சீதையை யென்பப் புகன்று
செய்திகளனைத்து மச்சீதை வசனங்களும்
தீய ராவணன் கொடுமையும்
ஒவ்வவே யுரைசெய்து சீதை யடையாளமா
உதவு சூடாமணி தர
உண் மகிழ்வெய் திராகவனு மவனைப் புகழ
உறு துணைவ னிரவிசுதனும்
சர்வ சேனைத்தலைவருங் களிப்பாகுமச்
சலதியிற் றேய்தலானார்
சனகி .... ராமா. (60)

தீதறுஞ் செய்திக் டெரிந்து பூப்பெய் தமரர்
சிந்தை மகிழ் வெய்தலானார்
திசைதொறு மிருந்த கவிவீர ரனைவரு மொன்று
சேர்ந்த வகை வகை யாகியே
ஊது நீலன் குமுதன் சாம்பவனுடன் சிறுவன்
உயர் படைக் கேசரி யெனும்
ஒப்பறும் பலமிகு படைத்தலைவ ரனிகமு
டொன்பதி னிரட்டியோர்தாம்
நாத னடிமலர் தொழ மகிழ்ந்து தென்றிசைதன்னில்
நாடி நிற்கப் பணித்து
நல்ல கவி வெள்ள மெழுபது மேழிரட்டிநாள்
நலமுட னிருந்ததற்பின்
தாதுகண் மிகுந்த மாலியவா னகன்று தென்
சலதி யக்கரை மேவினான்
சனகி .... ராமா. (61)

கவிவெள்ள மெழுபதொடு விரிகடல் கடத்தலக்
கரை யெய்தும் வண்ண மெண்ணிக்
சுத்த னவ்வம்புதிக் கரையினிற் றம்பியொடு
கவிமன்னரோ டிருக்க
அவிவேகி ராவணன் புன்செய்கை சகியாமல்
அரிய வீடண னிலங்கை
அரண்மனை விடுத்தி ராமன் சரண் சரணடைய
ஆதரித் தபய மருளிப்
புவிபுள்ள நாளள விலங்கை யரசாள முடி
புனைவ னென வாக்களித்துப்
பூமாரி விண்ணவர் பொழிய வீடணனை யம்
பொன்னடிக் கடிமை கொண்டான்
தவறாது குருவார்த்தை முறையாக வேள்வி வரு
தாடகையை யெய்து கொன்ற
சனகி .... ராமா. (62)

அண்டிய வரக்கர் பதியுங் கவிகளின் பதியும்
அனும னங்கத னுதியாம்
அரிவர்க்கமது சூழ வொருசப்ததின மளவும்
அம்புதியி னரசை யுன்னிக்
கண்டிலை யதாற் கடலின்மீது கணை தொட வெந்து
கடுகிவந் தவ னிறைஞ்சக்
கடலதனி லணை செய்ய வழி கொடுத்திடுதலால்
கவிமன்ன ருவகை கூடிச்
செண்டாடி வரை கொணர்ந் தெறிய நள னவை கொண்டு
திருவணை சமைக்க மூன்று
தினமதனி னூறு யோசனை நீள மகலமது
செப்பு பத்தோசனையதாய்ச்
சண்டவேகங் கொண்டு சேதுவைப் பந்தித்த
சற்புருஷ சார்வபௌமா
சனகி .... ராமா. (63)

திருவணை தனைக் கண் டுளத்தின் மகிழ்ச்சியொடு
சேனை சமுத்ர முடனே
செய்ய வம்புதி கடந்தெய்திச் சுவேலைமலை
சேர்ந்தவ ணிருந்த காலை
வரு சுகச்சாரணர்களொடு நீ கனன்றுரை
வழங்க வன்னவர்க ளணுகி
வந்த படையின் றொகையு முன் பெரிய வலிமையும்
வழங்கு நின்வசனமு மெலாம்
பொரு மிராவணனொடு புகன்றிட வெருண்டு நரி
புணரியின் கரை வளைத்தல்
போலாகு மவராவி போக்குவே னென்னவே
புனையு மணிமுடி துலங்கத்
தருகவரி மாதர் புடைசூழ வடகோபுரந்
தனிலிருந் தறிவதானன்
சனகி .... ராமா. (64)

தம்பியொடு கவிமன்னர்தம்மொடு சுவேலைமலை
தன்னி லேறித் தசமுகன்
சம்ப்ரம மிகும் விதந்தன்னை வீடண னோது
சமயத்தில் வெகுளி மூள
அம்பது வெனும்படி யெழுந்து கதிரின் சிறுவன்
ஐந்திருசிரன்மிசை குதித்
தங்கவனை மோதி யவ னுக்க மணி மகுடமுன்
அம்புய பதத்தில் வைக்கச்
சம்பிரம மாறி வலி மதிகெட்ட வன்னவன்
தன்றலை குனிந்து நகர்போய்த்
தங்கியது நிற்க பின் லங்கைதனி லங்கதன்
தான்சென் றரக்கனுடனே
தம்பிநிக ராவையோ மற்றமர்க் குரியையோ
சாற்றென வினவினனால்
சனகி .... ராமா. (65)

ஆண்டகை யுரைத்தவளவிற் சரணடைந்து திறல்
அங்கத னிலங்கைநகர் சென்
றண்ட மதிரும்படி யரக்கனெதிர் நிற்க நீ
ஆரென வவன் வினவலால்
பூண்ட சிலை ராகவன் றூதனுன் வாலி தரு
புதல்வ னங்கத னென விது
போது நீ வந்த செய லேதென்ன வெதிர் நின்று
போர்செய்ய வல்லை யாயின்
நீண்ட நின்பலமுட னெழுந்துவா நீசனே
நீ பிழைத்திடுவ தாயின்
நேரிழையைவிட் டிரகுநாதர் சரணம்புகுதல்
நீதியென வோதி வாரி
தாண்டி நின்னூரருகிருந் தறிய விட்டனர்
சம்மதஞ் சொல்க வென்றான்
சனகி .... ராமா. (66)

அங்கத னுரைத்தவை யறிந் திராவண னகைத்
தலையு மானிடர்க ளெளியோர்
அவரை யெதிரிடலெனக் குற்ற குறையா மெனவும்
அச்சங்க ளர்ந்த வெனவும்
பொ குற் றெழும்பி லவர் படுத லையமதன்று
போரி லெதி ராரென்னவும்
புன்மனித ரென்னை வர வுன்னை விட்டார் வெற்றி
போர்முனையி லறிவை யெனவும்
மங்கைசிறை யினிவிடுதல் கனவென்று சொல்லெனவும்
மைந்த நீ யிங்கிருப்பின்
மனிதனை வதைத் துந்தைதனதரசை நீயாள
மணிமுடி தரிப்ப னெனவும்
சங்கையற வோத விவ னங்கமது பொங்கி யது
சாற்ற லாற்றாது மேல்
சனகி .... ராமா. (67)

மிக்கு வெகுளா நகைபுரிந் தரசு நீபுதவல்
ம்ருகராசனுக் கொர் ச்ரூரான்
மேலான வரசுதவு மாருது மெனவோத
மீளாத கோபத்துடன்
அக்கண மரக்கர்படை யங்கதன்மீ தேவ
வவருபி ரழித்து நொடியில்
ஐய நின்னடி தாழ்ந்த வங்கத னிராவணன்
அறைந்தவை புகன்றகாலை
உக்ரமுள நின்மொழியின் வண்மை யிளையோன் சிலைபின்
ஓசை புவனங்க ளதிர
ஓடிய கவித்திர ளிலங்கை மதிளகழி சூழ்ந்
துயர் நிருதர் படை சாடவே
சக்கர மெடுத் திப மழைத்தளவி லோடிவரு
சர்வகாரண வகந்தா
சனகி .... ராமா. (68)

வானரர் கைம்மிஞ்சும் வகைகண் டசுரநாதன் விட
வந்த படை குந்த நெடுவாள்
வன்சிலை யுலக்கை தடியின்வித மெடுத் தரியின்
வர்க்கமது விழ மோதலால்
தானவபலத்துட னெதிர்ந் தமர் செயற்கரிய
தன்மைய கவிப்படையெலாம்
தானோடி நின்மறைவு சார்ந்திடக் கண்டுளம்
தாங்காம லார்ப்ப விரைவாய்ச்
சேனைகாவலரெலாஞ் சீறி நிருதர்களைத்
தீர்ந்திட முடிக்க விளையோன்
தீரவாளிக டைக்க நிருதர் பட லங்கையின்
தெருவெலாங் குருதி பாயத்
தானை நாதர்கண் முறிந் தோடி ராவணனுடன்
சாற்றின ரநந்த நாமா
சனகி .... ராமா. (69)

கேட்டழலதாமென வெகுண் டுயிர்த்துச் சடிது
கிரியொத்த விரதமேறிக்
கேசரியை யொத்த வசுரப்படை யநேகரொடு
கிளரிந்த்ர சித்த னுடனே
வாட்டிறன் மிகுந்த நிருதன் சடிது வந்தளவில்
வாநரத்தலைவருடனே
வள்ள லிளையவனொடு மெழுந்து கவிவெள்ளமதை
வருநிருதர்மீதி லேவி
நீட்டிய படைத்தலைவர் வீடணன் வருநிருதர்
நிரைநிரை யெதிர்ந் தமர்செய
நீண்ட வசுரன்சுதனு மாண்டதை யிலக்குவனு
நின்றமர் தொடங்க மிசவும்
தாட்டுணைக டுணையென்னு மாருதியின்மிசை கொண்டு
தசமுகனை மோதினனரோ
சனகி .... ராமா. (70)

நீடிய வரக்கர்படையோடு கவிமன்னவர்
நெடுஞ்சமர் விளைக்கு மளவில்
நீ யசுரனொடு முதனளமரில்வென் றவன்
நிராயுத னெனப் போக்கினை
வீடணன் ப்ரகத்தனை மிகுத்த சமரதில் வென்று
விண்ணுலகினிற் போக்கவும்
மிக்க வினையோனுட னெதிர்த்து முனையது கெட்டு
மேகநாதனு மோடவும்
சாடிய கவிப்படையினு லழிந்திடு மவுணர்
தங்குருதி நதி பாயவும்
சமரதி லழித் தசுரர் தளமது பறக்கவுத்
தண்டமுற நின்ற தேவா
தாதொழ விலங்கைமுடி வீடணர்க் கருளிய
தண்ணளிப் புருஷோத்தமா
சனகி .... ராமா. (71)

கேட்டசுரர்சேனைக ளிலங்கையிற் செல்லவே
கெட்ட தூமாட்ச னென்பான்
இளருறு விழிக்கடை சிவந்திட வெகுண்டு மிகு
கொர்வாந்தகார மூழ்கி
நீட்ட முள சூலாயுதப்படை யெடுத்தளவில்
நிருதர் படையோடு மேவி
நீண்ட கவியின்றிரள் கண்டதுண்டங்களா
நேரிட் டழிக்குமளவில்
ஓட்டமிடு கவிகளை நிறுத்தி யஞ்சனை குமரன்
ஓடிவரு மவனை யெதிர்கொண்
டும்பருட னம்புவி நடுங்க வமர்செய் தவுணன்
உயிரழிந்திட மோதலும்
தாட்டிய வரக்கன் விழ ராவணன் சோதரன்
தனை யழைப்பு மென்றனனரோ
சனகி ... . ராமா. (72)

ஆண்டகை யுரைப்படி யிராக்கதர் செயுங் கொடிய
அரிய வேதனையினாலும்
அடிபடுங் கடிமுரசு தாரை காடியை முதல
ஆன வோசைகளினாலும்
நீண்ட தொரு பசு மேட நிரைநிரை மிதித்திடலின்
நீடு வேதனையினாலும்
நித்ரை நீங்கிக் கும்பகன் னிராவணனடியில்
நேசமொடு பூசித்தபின்
மூண்ட கவிவெள்ளமுட னிருமனிதர்களு முடிய
மோதி மீண்டிடுதி யெனலும்
முத்தலைச் சூலமொடு சுற்றவுணர் சேனையொடு
முகில்போன்ற மேனியனு மார்த்
தாண்டனெதிர் ஏட்டு பனி யாமென நின்சேனையைச்
சாட வதுகண்டவளவில்
சனகி .... ராமா. (73)

அங்கதன் முதற் படைத் தலைவரெல்லா மிடைந்
தஞ்சி யோடச் சமர் விளைத்
தனுமனை யெதிர்த் தமரி லவனு மிடையத்தாக்கி
அரிய சுக்ரீவனை யெடுத்
தெங்கு மறியும்படி யிலங்கையிற் செல வெறிந்
திளையவன் பகழியாலே
யிருசெவியு நாசியு மிழந்து மதிநொந்து மெதிர்
ஏறி யந்தக னென்னவே
பொங்கிவரு கவிவெள்ளமதை மோதி வருகாற்றின்
பூளைமலர் போலாகவே
புடைத்திட வரிப்படை தரிக்கவியலாது மேற்
புறமிடுஞ் சமயமதனிற்
சங்கையற வில்லினு ணெலிதழைத்திட வருந்
தயித்தியனை யெதிர்த்த வாமா
சனகி .... ராமா. (74)

பத்துமுடியோ னிளவலுங் கிரியை நிகர் சிலை
பற்றி மிகு பகழி யேவப்
பருஞ்சிலையறக் கணைகள் நீவிடவு மற்றவன்
பாங்கி னொருதண்ட மேவ
அத்தண்டு துகள்செயவு மவனேவு மோர்சூலம்
ஆம்படையு மவலமாக
அக்கொடியன் வெற்பெடுத் தெறிய விருகணையினால்
அம்மலை கையொ டரிய
உத்தமக் கவிமன்னர் மாள வுதையிருகாலும்
உடனோர்கணையாற் றுணிக்க
உருண் டுருண்டே கீழ் நெருங்கரிப்படைதனை
ஒழித்திங்ஙன் மேலெங்ஙனும்
தத்திவரு கும்பகன் சிரமறக் கணைதொட்ட
தன்னிகரி லிரகுதிலகா
சனகி .... ராமா. (75)

பின்னவ னிறந்த செயன் மேவு சுகசாரணர்கள்
பேசிட விராவணன் மிகப்
பெருங்கவலை கொள்ளவு மிராவணியும் வந்து சில
பேசி யினி யென்கணைகளாற்
சின்னமனிதரை வென்றிடேனுபி னீபெற்ற
சேயல்ல னென்ன வோதிச்
செல்ல வதன்முன்ன மதிகாயன் முதலான சுதர்
சென்றமர் தொடங்கி மாள
இன்னம் வச்சிரதந்தன் கம்பனுதியரான
இராக்கத ப்ரமுகரெல்லாம்
ஏகி வானரசேனையா லுயிரழிந்திடவும்
இந்திரன்பகைவ னக்கால்
தன்னிகரிலாப் படை யநேகரொடு தனுவோடு
சமர்முனைக் கணுகலானன்
சனகி .... ராமா. (76)

அஞ்சனைகுமார னங்கதனுதி கவிமன்ன
ரவனுட னெதிர்க்க வவரை
அதட்டி யிருமனிதர மவரி லிளையவனெங்
கவன்றிறலை யறிவ னென்ற
வஞ்சனெதிர் தம்பியு நெடுஞ்சிலையுடன் கரிமுன்
வரு சிங்கமென வெதிர்த்து
வானவர் நடுங்க வமரானது செயும்பொழுதில்
வாலிசேய்மீ திளையவன்
செஞ்சரணமுற் றேறியும் புலவரின் பகைவன்
தேரினி லிருந்து மலையச்
சிந்து மிளையோன் பகழியா லவுணர் படை மாண்டு
தெயித்தியன் றனிவிண்ணவர்
சஞ்சல மிகுந்திட வெழுந்து முகிலின் மறைவு
சார்ந்தன னனந்த நாமா
சனகி .... ராமா. (77)

கண்டு வீடண னெஞ்ச மெலிவாகி யக்காலே
கர்மி யினி யென்செய்வனோ
கார்மறை விருந்தென்று சீறி நெடுமூச்சொடுங்
ககனமிசை கண்ணோட்டலான்

முண்டகன்கணை யவுண னேவ வது தம்பிமுதல்
முழுதுள கவிப்படையெலாம்
மூட வரவின்கணையு முடனேவி மந்தித்து
மூடனு மிலங்கை சேர்ந்தான்

கொண்டனிகர் மாருதியு மவசத்தை நீக்கவே
கோதறு படைத்தலைவரும்
கூடிவர வீடணற் றேடி யவுணன் செய்த
குரூரவகை கண்டுசாவிச்

சண்டலில்லா வெற்றி யஞ்சனைகுமாரனுற்
சஞ்சீவி வர வேகமா
சனகி .... ராமா. (78)

மிக்க சல்லியகரணியதனு லவ்வடுவாறி
மேலான சஞ்சீவியின்
மேன்மையா லுயிர்மீண்ட வானர ரிலக்குவன்
வெய்தகன்றெழ மகிழ்ந்து

திக்குற நடுங்கிடச் சிங்கநாதஞ் செய்து
சென்றரக்கரை வதைக்கும்
செய்திக டெரிந்திராவணி மாயசனகியின்
சிரங் கொய்து நகர்துறந்தே

ஒக்கவோர் நிகும்பலையி லுற வீடணன் றெரிந்
தோடி யவன்மாய மோத
வொல்லையின் கவிப்படை யநேகருட னிரவிசே
யுபரனும னங்கதனுடன்

தக்க புகழ் தம்பி சென்றக்கொடியவன் செய்த
தனி மக மழித்துவிட்டான்
சனகி .... ராமா. (79)

அப்பொழுதி லங்கவ னிரும்பலை யழிந்திடலும்
அனலென வெகுண் டிரதமேல்
ஆகி யிளையோன்றனை யெதிர்த்தனன் மடங்கலை
அலைக்கு மதயானையதுபோல்

வெப்புரை யநேக மிளையோனை யிவனோத வவன்
மீளவு முரைக்க வவுணன்
மிக்க சரமாரிகள் பொழிந்திடவும் வாலிசேய்
மிசைநின்ற தம்பி கணையால்

ஒப்பறு மவன்சிலையுடன் கவச துவச மற
ஓங்கரத சாரதி விழ
ஓடி யசுரன் முகிலொளித்திட வறிந்தையன்
உதவு பிறைமுக வாளியால்

தப்பறு சிரங் கர மறுந்துடல மூன்றதாய்த்
தரணி விழ வெய்தனனரோ
சனகி .... ராமா. (80)

மந்தர மெனும்புய னிறந்திட மகிழ்ந்தமரர்
மலர்மழை சொரிந்து புகழ
வந்தசுர னற்றவகை யோதி யடிமீது பணி
வள்ளலை மகிழ்ந்திருக்கச்

சுந்தரமகன் விழுதல் தூதர்கள் புகன்றிடத்
துன்பத்தின் மெலி ராவணன்
தோகை சீதையை வீட்டி யானகுவனென்னவே
துணிவொடு நடந்திடுதலால்

வந்து மாலியவான் றடுத்து மனிதரை வெல்கு
வாயென்று மனைபி னேகி
மகிழ் பூசை முறைமுறைபுரிந் திரதமேலாகி
வலிய படையாவு மேந்தித்

தந்தி பரி யாளிரத மென்ற படையுந் தொழச்
சமர் முனையில் வருவதானன்
சனகி .... ராமா. (81)

நிற்க வதன்முன்பி லக்கினிருயனன் மால்யவான்
நிருதராதிய ரனேகர்
நீரைநிரை யெதிர்த் தரியினங்களை வதைக்க வமர்
நேர்ந்தவர் மடிந்தனரலால்
விக்கிரம மிகுத்திடு மிராவணன் விடுக்க நெடு
வெள்ளமெனு மூலபலமாம்
வெய்யர் வர வையக நடுங்க விண்ணவர் வெருவ
வேலைகள் ததும்ப வார்த்துச்
சுக்கிரிவ னனும னங்கதன் முதலர் நிற்க வுறு
துய்ய கவிவெள்ளமெல்லாம்
சொல்லாம லோட்டமிட வல்லமையுடன் வந்து
துட்ட வசுரப்படைகளைத்
தக்கதொரு கோதண்ட நாணைவிபடுத்தியே
தனியிராகவ னெதிர்த்தான்
சனகி .... ராமா. (82)

உக்ர கோதண்டம் விடு கணையா லரக்கர்தலை
உருள வகலாமல் திசைகொண்
டோடிவந் தும்மை யவர் மூடவுஞ் சங்கைபெற்
றேரம்புதன்னை விடலால்
அக்கொடியர் கண்கலங்கிட வெங்கு நீயாகி
அவரவரின் மடிவதாக
அடித்துவரு மூலபல வெள்ளமெல்லாந் தொலைய
அரியதொரு திறலின் மேலாம்
இக்குவிசயங்கொண்டு நிற்கையி லிராவணன்
செய்தி யறிவுற விடுக்கச்
சென்ற துன்மந்திரி மகோதரனையுங் கொன்று
தீர வுல்லாசமாகத்
தக்கபுகழ் பெறு பரம தரணிரக்ஷக வாம
சாட்குண்ணிய புருடோத்தமா
சனகி .... ராமா. (83)

சாரணர்களா லுணர் தசமுகனு மூண்டிடும்
கழலென வெகுண்டு மிகவும்
தன்னவரின் மங்கைய ரலான் மற்ற திறலொத்த
தயித்தியானிகங்கள்பலரும்
வாரண ரதங்க ளரி வாசி புலி யாளிமுதல்
வாகனமிசைக் குறுகியே
வல்லபடை கைக்கொண்டு சீறிவர வும்பரொடு
மறலியு நடுக்கமுறவே
தாரை பேரிகை முரசு சங்கங்க ளார்ப்பவே
தரிப்பருந் தீர மூளத்
தரணியு நடுங்க விரதங்கடவி ராவணன்
சமர்க்களங் குறுகினனல்
சாரிய தொண்டர்தக் திருவுளத்தினி லுள்ள
சர்வகாரண பூதனே
தசனகி .... ராமா. (84)

வந்தன னிராவண னமர்க்கென விபீடணன்
வந்தறைய வகமகிழ்ந்து
வன்சிலையுடன் கணைகள் கைக்கொண்டணைந்துகவி
வர்க்கமுட னிற்குமது கண்
டிந்திரனும் விண்ணவரு மிரதமொடு மாதலியை
இங்கு வரவிட்ட வதனல்
ஏதென வரும்பரிசு மாதலி யுரைக்க ரதம்
ஏறி முனிவர் புகழவும்
கந்தமலர் விண்ணவர்கள் தூவிநின் றோடவும்
கவிமன்னர் கொண்டாடவும்
காரெனு மரக்கர்படை கதிரெனு முனைக்கண்டு
காண வரிதா மோடவும்
சந்தமுள கோதண்ட சரவேகமதி லவர்கள்
தமை மடிய வெய்யவே மா
சனகி .... ராமா. (85)

அசுரர்படைமுழுவது மடிந்திட வறிந்து சின
அன விராவணனு மெய்தி
அந்தகனும் வெருவியிட வந்து வின்னுணெலிய
தாக்கியே தாக்க வக்கால்
விசய கோதண்டவின் னுணெலி விளைத்து நீ
வெய்யனை மறித்த பொழுதில்
வீர ராவணன் மழைபோல வன்கணைகளை
விட வதனிரட்டியாகத்
திசைதிசைதொறும் பகழி சிந்திட முனைந்து சமர்
செய்ய வமரின் பெருமையைத்
திசைமுகர்க்காகிலு முரைத்திடக் கூடுமோ
தினமுந் திருந்த வருள்செய்
சசிவதனமுஞ் சரோருக பதவிலாசமும்
தன்னையே தானேரதாம்
சனகி .... ராமா. (86)

கஞ்சன்மகன்மைந்தன் மகனேடமர்விளைக்கையிற்
கைத்திறமை விற்றிறமையும்
காட்டி யொருவர்க்கொருவர் விட்ட சரனை வெட்டிக்
கடுஞ்சமர் செயும் பொழுதினில்
விஞ்சை மாயந்தனை யிராவணன் மொழிந்திடலும்
வீழ்ந்திடு மரக்கரெல்லாம்
வேகமுட னுயிர்பெற் றனேகவெள்ளஞ் சேனை
மேன்மேலும் வந்து கவிய
அஞ்சிடா வகை ஞானவம்பேவி யம்மாயை
அனலிட்ட பஞ்சுபோல
ஆக வன்சூலத்தை யவனெறிய வதை நீக்கி
அறுத்தனை யவன் கவசமும்
தஞ்சமென்றோர்க்கு வரு சஞ்சலமெலா நீக்கு
தண்ணருணிறைந்த கண்ணு
சனகி .... ராமா. (87)

வீரதண்டப்படை யிராவண னெறிந்திடலும்
வெட்டி யதையுந் துகள்செய
மீளவும் வெகுண்டு வேன் மழு வங்குசம் பரிசம்
மிக்க வாள் குந்த முதலாங்

கோரமுறு வன்படைக்கலமெலாஞ் சினமூண்டு
கொண்டெறிய வாடாமலே
கொடிய கணையா லவன் படை பொடிபடச்செய்து
கொண்ட னிகர் மன்ன னிற்பத்

தீரமுறு தெய்வவே லொன்றினைத் தசமுகன்
செலுத்த வதுகண்டு தேவர்
தியக்கமுற மன்விடுஞ் சரமனைத்தையும் வென்று
திருமார்பி னூடுருவவும்

சாரும் வாநரவெள்ள நொந்துட் கலங்கத்
தயையுடன் சண்ட பரமா
சனகி .... ராமா. (88)

கோடிய நீ விடுபடை யநேகமுந் துகளுறக்
கோறல்செய்தன மவையெலாம்
குறித்தனை யிதோ வரு சரத்தினை விலக்கெனக்
கோகநத னம்பு விடவும்

விடுபடு சரத்தி னேழ்புணரிநீருஞ் சுவற
விண்ணவர் நடுக்கமுறவே
விசைகொண்டு சென்று தசசிரபந்தி சிந்தி நில
மிசையின் றுடித் துருண்டும்

முடிகளவை மீள்வு முளைத் தசுர னிரதமிசை
மோகரித்திடுதல் கண்டே
முனைவாளி பல வெய்ய வினைய னங்கதை மாற்ற
மூர்க்கனை மகிழ்ந் துசாவித்

தடைபடா வித மிவன் றலைவிழுக வென வயன்
சரமேந்து சார்வபௌமா
சனகி .... ராமா. (89)

நெடுங்கணை யெடுத் தொருகணப்போதி லேவ வது
நேர்சமனை யொத்ததாகி
நிரைநிரை யரக்கன் விடு சரமவையெலாஞ் சிதறி
நீடு விசையாக வோடி

அடைந்தசுரன் மார்பி லுருவிப் புறமதிற் சுழன்று
ஆவி கொண்டிட்ட தசுரன்
அப்புவியி லடியற்ற பனைபோல விழ வமரர்
ஆடி மாமலர் தூவினர்

படுங் கொடிய னுயிருண்ட பகழி யம்புதி தோய்ந்து
பரம நின்பக்கல் சேரப்
பங்கயன் முதற் சுராரு மாதவரும் வானவரும்
பாடினர்க ளுன்சீர்த்தியைத்

தடந்தனி னெடுங்கரி தளர்ந்தலற வந்துதவு
தயாசிந்துவான மாலே
சனகி .... ராமா. (90)

அருணவிழி யசுரன் விழ வங்குண விபீடணன்
அரற்றிடச் சோகமாற்றி
அணிமகுடமது சூட்டி யழகிய விலங்கைநகர்
ஆட்சி யவனுக் கருளியே

கருணை யனுமன் றிறல் வாலிமகன் வீடணன்
கடுகியேகிக் கருவுறுக்
கன்னி திருவடி தொழுதிராவணன் மாண்டமை
களித்துரைக்கக் கடவுளின்

சரணடைய வாசைகொள வென்னை வேண்டி யெதிர்த்த
தந்தையைச் சிறகரிந்தோன்
தன்பழி முடிக்க நானிங்கடைந்தே னுனைத்
தாவி வரவில்லை யென்று

தாணிதனின் மாருத வசைபெற்றும் வாழ்தல்
தகாதென வுரைத்த வாமா
சனகி .... ராமா. (91)

இந்தமொழிகேட் டனுமனுதிய ரனேகரும்
இரங்க நிறையார் சனகியும்
ஏந்தலுனைவிட் டிராவணன்சிறைபிடப்பட்
டிருந்தனன் கற்பு நாடி
நிந்தையற வெந்தழலி னின்னெதிர் குளித்துயினை
நீக்கிடுவனென்ன வாழ்த்தி
நேருள விலக்குவனை யழல்வளர்த்திட வோத
நெடுங்கனல் வளர்த்தவதனைப்
புந்தியின் மகிழ்ந்து வலம்வந்து மன்றிருவடிப்
புகழையே மனதி லெண்ணிப்
பொறியைந்தினிற் றீமை யுண்டாகி லாவிகொடு
போவெனக் கனன் மூழ்கினள்
சந்ததந் தனது மிகு புகழ் படித்தோர்க்கெலாம்
தன்னிகரின் முத்தியருளும்
சனகி .... ராமா. (92)

செந்தாமரைப்பொய்கை சேர்ந்து விளையாடிடும்
சிறையோதிமத்தை நிகராய்த்
தீப்புனல் குளித்தெழுஞ் சீதையின்பெருமை மன்
சித்தமுற மகிழ்வதானன்
சிந்தையின் மகிழ்ந்து கொண்டாடியாடிக் கவித்
திரண் முகிலெனக் கூவினர்
திசைமுகன் வலாரிமுதலான விமையோரு மேல்
செய்ய மாதவர்களெவரும்
வந்துநின்பெருமையை நினைத் தெங்களிடர்தீர்த்த
மாயனே புருஷோத்தமா
வாழி நின்மரபெலாம் வாழி யிளையோன் வாழி
வாழி கோதண்டபாணி
தந்தனை யெமக்கெலாஞ் சுகமென் றுரைத்தனர்
தயாளுவாஞ் சார்வபௌமா
சனகி .... ராமா. (93)

திடமுள விராவணன் சீதையைச் சிறைவைத்தல்
செய்த மாதவமேயலால்
செப்பலென்வேறு மிகு கற்பருந்ததியுமே
சீதைநிகராவ தரிதால்
அடலசுரன் முன்பு நளகூபரன்சாபத்தில்
அரிவையரை வலிதிற் புணர்ந்
தாற் சிரமுடைந்திடுமெனத் தீண்டிலன் மேனி
ஐய நின்குலம் விளங்க
மடமயிற் சீதையொ டயோத்திமாநகர் குறுகி
மணிமுடிக்கோனுகியிம்
மாநிலமெலாங் காத்து மாமகம் பல வாற்றி
மலிபுகழை யெய்துகவெனத்
தடமலர்ப்பீடத் தயன்மொழிந்தனன் புகழ்
சாற்றுதற்கரிய வரியே
சனகி .... ராமா. (94)

மிக்க வாநரவெள்ளம் வீடினே ருயிர்பெற்று
மீண்டு முன்போல வரவே
மேலான வர முதவி வைதேகிதனை வாழ்த்தி
விண்ணவர்கள் ககன மடையச்
சற்குண விவேக சிந்தாமணியெனுஞ் சனகி
தன்னை யன்போ டணைத்துத்
தனிவிபீடணனுடன் றனதனது புட்பகந்
தானுளது தருக வென்ன
அக்கண மரக்கரா லதை வரவழைத்தவனும்
ஐய நின்றிருமுனிடவே
அரிவெள்ள மெழுபதுட னிரவிசே யனுமன்முதல்
ஆன பதினெண் பெயருடன்
தக்க வீடண னிளையன் மனைவியொடு மானக்
தனிற் சார்ந்த பரமபுருஷா
சனகி .... ராமா. (95)

விஞ்சையெனு மாமறை விளம்ப வாகாயத்து
மேல்வரு விமானமதுதான்
மிக்க விசையாக மனவேகமதையுந் தள்ளி
மேவி வடதிசையை நோக்கி
மிஞ்சு திருவேணி சடந் தெய்து நெறி சார்ந்தவன்
மெய்த்தவ பரத்துவாசன்
மேலான முனிவரன்றன்னகத்தினி லுண்டு
மேவுவாய் நாளையென்னச்
சஞ்சல மிருந்த பரதற்கு வருவேனெனச்
சாற்றுநா ளின்றுதலால்
தள்ளி நின்மொழி துறந் தெய்திடானின்றென்று
தங்கு மாருதியை யேவித்
தஞ்செயல் வருஞ்பரிசு பரதனுக் கோதவே
சாற்றின னிறைந்த கற்பார்
சனகி .... ராமா. (96)

அஞ்சனை குமாரனை யயோத்திநக ரேகென
அமைத் திருடி திருமனையிடத்
தனைவரு மிருந்தமுதருந்த வதுநிற்கமேல்
அனும னம்பர மார்க்கமாய்
மிஞ்சுபுகழ் மந்தரம் விண்ணின்க ணெய்தல்போல்
விரைவுட னயோத்திசெலுமுன்
மிக்கநீ சென்றநாள்தொட்டு மாதவவேடம்
மேவியே நந்திபுரியில்
சஞ்சலமுடன் றின மகற்றியிடு பரதனொடு
சத்ருக்கனென்ற துணைவர்
சாமிசொற் றவறலா லாவி தீர்வோமெனத்
தழலை வலம்வருவோர் கண்முன்
தஞ்சமென்றோர்க் கிடர் தவிர்க்கு மூன்றிருநாமம்
சாற்றி யனுமன் சார்ந்தனன்
சனகி ... ... ராமா. (97)

செந்தழல் குளிப்பதை மறுத்து மிதியடி தந்து
தேவநீ போக்கியமுதல்
செய்திகளனைத்து மங்கவர் மகிழ வோதியே
சென்று நின்றிருவடிக்கீழ்
வந்தனஞ் செய்திட மகிழ்ந்தவனை வாழ்த்தி முனி
வளவி லன்றிரவு நீக்கி
மையிருள் விடிந்திட விமானமிசை யனைவரொடும்
மாநகரயோத்தி சென்று
சிந்தையின் மகிழ்ந் தன்னைமாரடி பணிந்து நின்
திருவடி வணங்கு துணைவர்
சித்த மகிழத் தழுவி யுற்றவர்க் கருளியே
திருநகரெனுங் கடற்குச்
சந்திர னுதித்துவரு தன்மைபோல் வண்மைபெறு
தயாரசகுணபி ராமா
சனகி .... ராமா. (98)

நீடிய விமானமதை விண்ணவர்கள்வசமாக
நியமித்தளித்து மகிழ்வாய்
நீடாழி யுலகாள முடிசூட மனதாகி
நீதிமன்னவர்க ளறிய
ஓடியிடு சாரணர்களா லோலை போக்கிவைத்
தும்பருட னுலகிலோரும்
ஒருமித்து வர மிகுந்தவரெலாங் கூடிவர
ஓங்கெழி லயோத்திநகரைக்
கோடிவகை தம்பிய ரலங்கரித்திட வளக்
கோசலத்தேயமெங்கும்
கொண்டாட ராஜவாசாரமண்டபமான
கோயிலாஸ்தானமதனில்
சாடியே பார்பரிகள் மாருதி செயப் பூண்ட
தவமுடி தவிர்த்த ராமா
சனகி .... ராமா. (99)

புண்ய தீர்த்தங்களா லபிஷேகமாகி யணி
பூண்டு பூந்தார் புனைந்தே
பூசுரர்க ளுவகையொடு சாந்தியோமங்களைப்
புரிந்தாசி புகல நிர்த்தம்

பண்ணி யிமையோர்கண் மலர் தூவ மேனகை யுருப்
பசியாதியோர் மங்களம்
பாட வனுசன் பரதனாதியோர் வழிபடப்
பக்தர்கள் பணிந்து நிற்ப

எண்ணரிய வாத்ய சங்கீதநாதங்களால்
எண்டிசைகளெங்கு நிறைய
எங்கு மங்களவோசை யோங்க வரியாசனத்
திருந்து மெய்ஞ்ஞான முற்ற

தண்ணுதல் வசிட்டரிட வெற்றிமணிமுடியினைத்
தாங்கி யுலகாண்ட ராமா
சனகி .... ராமா. (100)

வாழ்த்து.

ஐய நின்னருள் வாழி யாழியின் மகள் வாழி
அரனொடு பவானி வாழி
அம்புயத்திறை வாழி யம்மை பாரதி வாழி
அண்டர் மாமுனிவர் வாழி
வையமெங்சணும் வாழி யந்தணர்தம் மறை வாழி
வருமரசர்நீதி வாழி
வனிதையர்கள் கற்புமிக வாழி யருண்மழை வாழி
வாழி கோசலதேயமும்
மையறு மயோத்திநகர் வாழி யனுமானொடு
வாநரர்க ளடியர் வாழி
மன்னிய பெருஞ்கவிஞான வாழ்வார் வாழி
மாத்தமிழ்மறைகள் வாழி
தையல் சீதாபணியுடன் றிகிரி சங்கு வாள்
தண்டு கோதண்டம் வாழி
சனகி .... ராமா. (101)

தசரத ராம சதகம்

முற்றிற்று.